**THE LABOUR COURT, SALEM**
**C.P.No.6 Of 2020**

05.03.2025

**RW1 – திரு. சுப்பிரமணியன்**
குறுக்கு விசாரணை – (மனுதாரர் தரப்பில்)

வழக்கில் சம்பந்தப்பட்ட தியாகராஜன் 01.05.1974 அன்று பணியில் சேர்ந்தார் என்றால் சரிதான். அவர் பணியிலிருந்தபோது 28.01.2004 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் 30 வருடங்கள் தொடர்ந்து பணி செய்துள்ளார் என்றால் 29 வருடங்கள் , 8 மாதம், 27 நாட்கள் பணிபுரிந்தார். அவர் பணியிலிருந்தபோது இறந்துவிட்டதால் அவருக்கு குடும்ப நலநிதியாக ரூ.1,00,000/–த்தை 24.02.2006ம் தேதி நடவடிக்கை படி 16.03.2006ம் தேதியிட்ட காசோலை மூலம் முதல் மனுதாரருக்கு கொடுக்கப்பட்டது என்றால சரிதான். ஈட்டிய விடுப்பு ரூ.99,884/–ஐ 07.08.2006ல் முதல் மனுதாரருக்கு கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். பணிக்கொடை, வருங்கால வைப்பு நிதி இரண்டும் சேர்த்து ரூ.5,02,953/–ஐ முதல் மனுதாரரிடம் 22.06.2006 அன்று கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். கொடுக்கப்பட்ட இந்த மூன்று தொகைகளையும் தியாகராஜன் இறந்த 30 நாட்களுக்குள் கொடுக்கக்கூடாது என்று நீதிமன்றம் தடையாணை எதுவும் பிறப்பித்துள்ளதா என்றால் இல்லை. மனுதாரர் மின்சாரவாரியத்திடம் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ், மற்றும் நிலுவையில்லா சான்றிதழ், மற்றும் சம்மத கடிதம் சமர்பிக்கவில்லை.

அனார்களி என்பவர் தாக்கல் செய்த சிவில் வழக்கு 01.03.2005 அன்று தள்ளுபடி ஆகியுள்ளது என்றால் சரிதான். பணிக்கொடை தொகையிலிருந்து ரூ.2,240/–, ரூ.10,504/– மற்றும் ரூ.1,000/– ஆகியவை பிடித்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பணிக்கொடையில் எதற்காகவும், எந்த தொகையும் பிடித்தம் செய்ய வாரியத்திற்கு உரிமை இல்லை என்றால், பிடித்தம் செய்யலாம். மனுதாரர்கள் மேற்கண்ட மூன்று தொகைகளையும்

பெறுவதற்கு ஆவணங்களை சமர்பிக்கவில்லை என்று எதிருரையிலோ, என்னுடைய முதல் விசாரணை சாட்சிய பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். மனுதாரர் அசல் மனுவுடன் தாக்கல் செய்த ஆவணஙகளை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். மனுதாரர் மனுவுடன் சேர்த்து தாக்கல் செய்த ஆவணங்கள் குறித்து எதிருரையிலும், முதல் விசாரணைக்கான சாட்சிய வாக்குமூலத்திலும் ஆட்சேபணையோ, மறுப்போ தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

16.10.2019 அன்று தனக்கு வரவேண்டிய பணபலன்களை தருமாறு மனுதாரர்கள் அனுப்பிய கடிதத்தை நாங்கள் பெற்றுக்கொண்டும் பதில் எதுவும் தரவில்லை என்றால் சரிதான். Ex.P6,P7 ஆகிய எங்கள் நிர்வாக உத்தரவுகளுக்கு புறம்பாக மனுதாரர்களுக்கு மனுவில் கண்ட பலன்களை கொடுக்கமுடியாது என்று சொல்ல உரிமை இல்லை என்றால சரியல்ல. வாரிய விதிமுறைகள் படி எல்லா தொகைகளும் கொடுக்கப்பட்டுள்ளது. காலதாமதமாக கொடுக்கப்பட்ட தொகைக்கு வட்டியும், நிலுவை பணபலன்களையும் மனுதாரருக்கு கொடுக்க நிர்வாகம் கடைமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem